2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) அறிவிக்கை கொடுக்கப்பெற்றுள்ள ஒத்திவைப்புத் தீர்மானங்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து உட்காருங்கள். இப்போது வேண்டாம். பேரவைக்கு ஓர் அறிவிப்பு. எதிர்க்கட்சியிலுள்ள சில தலைவர்களும், எதிர்க்கட்சியிலுள்ள சில உறுப்பினர்களும் பல ஒத்தி வைப்புத் தீர்மானங்களைத் தந்து இருக்கிறார்கள். அதை எடுத்துக்கொள்வதா என்பது பற்றிய ஆய்வு என்னிடத்தில் இருக்கிறது. இதற்கிடையில் இன்று காலையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வேறு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் ஒத்திவைப்புத் தீர்மானங்களை எப்படி எடுத்துக்கொள்வது என்பது பற்றி முன்னால் இருந்த பேரவைத் தலைவர்கள் கொடுத்தத் தீர்ப்பை நான் தெரிவிக்கிறேன் . . .

"ஒத்திவைப்புத் தீர்மானங்களைப் பல பொருள்பற்றி கொடுக்கிறார்கள். இருந்தாலும் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிற காரணத்தினால் அவற்றிற்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. அதையெல்லாம் கூட எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. எந்த எந்த உறுப்பினர்கள் எதை எதைப் பற்றி பேச வேண்டும் என்று நினைக்கிறார்களோ, அவற்றைப் பற்றியெல்லாம் பேச இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் வாய்ப்பு இருக்கிறது. . . . "
என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற ஒத்தி வைப்புத் தீர்மானங்களை எல்லாம் எடுத்துக் கொள்ள இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: பாயின்ட் ஆப் ஆர்டர். தாங்கள் தந்திருக்கின்ற தீர்ப்பில், ஒத்திவைப்புத் தீர்மானங்களில் கொடுக்கப்பட்டிருக்கின்ற விஷயங்களைப்பற்றி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் பேசிக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. ஆகவே ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்ள இயலாது என்று தெரிவித்து இருக்கிறீர்கள். நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது, அவ்வளவு தான், இனிமேல் அலுவல் ஆய்வுக் குழுவிற்கு சென்று இதைப்பற்றி விவாதிப்பதற்கு நாள் குறிக்கப்படும். அதன் முன்னால் இன்றையதினம் முக்கியமான பல பிரச்சினைகள் ஒத்திவைப்புத் தீர்மானங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே தங்களுடைய தீர்ப்பு இதை கட்டுப்படுத்தாது, ஆகவே ஒத்தி வைப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்ள இயலாது என்று தாங்கள் சொன்னது சரியாக வராது.

[முற்பகல் 10-50]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம்பிக்கை இல்லாத் தீர்மானம் அவையினால் அனுமதி அளிக்கப்பட்ட பிறகு, 10 நாட்களுக்குள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற ஒரு நிலை

இருக்கிறது. அதற்குள்ளாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற ஒரு நிலை உருவானால், அதற்குப் பேரவைத் தலைவர் குறுக்கே நிற்கவில்லை. அலுவல் ஆய்வுக் குழு என்றைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற முடிவெடுக்கிறதோ, அதை யொட்டியே ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்வது பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்த காரணத்தினால், ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது என்று தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில் எந்தப் பொருளை பற்றி நம்பிக்கையில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதோ, அதைப் பற்றி பேச வேண்டியிருக்கும். ஒரு சில உறுப்பினர்கள்தான் பேச முடியும். அத்தனை உறுப்பினர்களும் பேச முடியாது. ஆகவே, ஒத்தி வைப்புத் தீர்மானத்தை அனுமதிக்க இயலாது என்று சொல்வது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் சொல்வது சரியல்ல. நம்பிக்கை இல்லாத் தீர்மானம் என்பது எல்லாப் பிரச்சினைகளையும் உள்ளடக்கியதாகும். திரு. சங்கரய்யா, திரு. உமாநாத், திரு. ரமணி ஆகியோர்கள் கொடுத்திருப்பது, ''Disapproval of the Labour Policy, Law and Order and Minority Community'' போன்ற குறிப்பிட்ட பிரச்சினைகள். ஆனால், எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சார்பில் திரு. சாதிக் பாட்சா அவர்கள் இந்த அரசின் மீதே நம்பிக்கை இல்லை என்று கொடுத்துள்ளதன் பேரில் எல்லாப் பிரச்சினைகளைப் பற்றியும் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இல்லையென்று சொல்ல முடியாது. எதையும் வாதாடலாம், அதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில முக்கியமான தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறேன். சிறைச்சாலைகளிலே உள்ள நக்சலைட்டுகள் விடுதலைபோன்றது. மிகவும் அவசரமான பிரச்சினை........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் பேச்சை ஏற்றுக் கொள்ள முடியாது. மீறிப் பேசினால், நீக்க வேண்டிய நிலை வரும். அந்தப் பிரச்சினையை இங்கே எழுப்பாதீர்கள். அறையிலே வந்து கேளுங்கள்.